**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ம் நாள் திங்கள்கிழமை**

**O.S. 60/2022**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW2-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சங்கர்** | **தாலுக்கா** | : | **திருவாரூர்** |
| **த/பெ** | : | **மாரியப்பன்** | **கிராமம்** | : | **கோமல்** |
| **ஜாதி** | : | **SC** | **தொழில்** | : | **விவசாயம்** |
| **சமயம்** | : | **இந்து** | **வயது** | : | **43** |

**முதல் விசாரணை**

நான் இந்த அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை :**

வாதி, பிரதிவாதி இருவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி ராமச்சந்திரன் திருவாரூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். ராமச்சந்திரனுக்கு விவசாய வேலைகள் செய்து வருவதாக சொல்வதற்கு எந்த புல எண்ணில் உள்ள சொத்திற்கு என்றால் புல எண் தெரியாது. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. நான் வாதிக்கு 2020, 2021 வருடங்களில் நான் வேலை செய்து கொடுத்தேன். வாதி எனக்கு

தெரிந்த நபர் என்பதால் அவருக்கு சாதகமாக வாதிக்கு விவசாய வேலை செய்து கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விவசாய பணிகள் என்னென்ன செய்து கொடுத்தேன் என்று நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**<u>2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01-ம் நாள் திங்கள்கிழமை</u>**

**<u>O.S. 60/2022</u>**

**வாதி தரப்பு சாட்சியாகிய PW3-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **லெட்சுமணன்** | **தாலுக்கா** | : | **திருவாரூர்** |
| **த/பெ** | : | **வெங்கடாஜலம்** | **கிராமம்** | : | **கோமல்** |
| **ஜாதி** | : | **BC** | **தொழில்** | : | **விவசாயம்** |
| **சமயம்** | : | **இந்து** | **வயது** | : | **62** |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். வாதி, பிரதிவாதி இருவரும் எனது உடன்பிறந்த சகோதரர்கள். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம் /- S. விஜய் ஆனந்த்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.